ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2507/02 - 2026 සැප්තැම්බර් මස 21 වැනි සඳුදා - 2026.09.21

2507/02 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**கல்வி , உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு**

**இலங்கை ஆசிரியர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

**05 ஆம் திருத்தம்**

கீழே பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தம் செய்யப்பட்ட 2014 ஒற்றொபர் மாதம் 23 ஆம் திகதியுடைய 1885/38 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பானது கீழே பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு மீண்டும் திருத்தப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி அமையும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தரவின் படி,

**நாலக களுவெவ**
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

2026 செத்தெம்பர் 14.

**பகுதி I**

**திருத்த இலக்கம் 01: 2019 ஏப்பிரல் மாதம் 22 ஆம் திகதி மற்றும் 2120/2 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி**

**திருத்த இலக்கம் 02: 2021 நவெம்பர் மாதம் 24 ஆம் திகதி மற்றும் 2255/14 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி**



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்த இலக்கம் 03: 2025 யூலை மாதம் 08 ஆம் திகதி மற்றும் 2444/21 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி

திருத்த இலக்கம் 04: 2026 யூன் மாதம் 19 ஆம் திகதி மற்றும் 2493/61 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி

பகுதி II

13.8 "கல்விமானி பட்டதாரி" எனக் குறிப்பிடப்படுவது பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அல்லது வேறு விசேட பாராளுமன்றச் சட்டங்கள் மூலம் நிறுவப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட, பின்வரும் நியதிகளைக் கொண்ட கல்விமானி பட்டச் சான்றிதழைக் கொண்ட ஒரு நபரைக் குறிக்கும்:

i. 04 வருட முழுநேர நேரடி Onsite (நிகழ்நிலை மூலம் அல்லாத) பட்டப் பாடநெறியாக இருத்தல்.

ii. பட்டப் பாடநெறியில் குறைந்தபட்சம் 120 கிரெடிட்டுக்களை (120 Credits) பூர்த்தி செய்திருத்தல்.

iii. அரசின் தேசிய அல்லது மாகாணப் பாடசாலையொன்றில் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலையொன்றில் குறைந்தபட்சம் 10 வார கால செய்முறை ரீதியான கற்பித்தல் பயிற்சியைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அச் செய்முறை ரீதியான கற்பித்தல் பயிற்சியானது தகுதியுள்ள மேற்பார்வை/ மேற்பார்வைக் குழுவொன்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.

iv. பட்டப் பாடநெறியில் குறைந்தபட்சம் 06 கிரெடிட்டுக்களை கொண்டதாக ஆய்வுக் கட்டுரை/ அறிக்கையொன்றைப் பூர்த்தி செய்திருத்தல்.

EOG 09 - 0378

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.